**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**M.C.O.P.No.114/2022**
**வழக்கு சாட்சி R.W.1**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.கார்த்திக் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : இளவேந்தன் | தொழில் | : நிர்வாக அதிகாரி |
| தகப்பனார் பெயர் | : நடராஜன் | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : மதுரை | வயது | : சுமார் 38 |
| தாலுக்கா | : மதுரை | நாள் | : 11.02.2026 |
| மாவட்டம் | : மதுரை | | |

<u>முதல் விசாரணை :</u>

நேஷனல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், கம்பைண்டு மோட்டார் OD and TP Claims HUB, மதுரை மண்டல அலுவலகத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வரும், நடராஜன் அவர்கள் மகன் இந்து சுமார் 38 வயதுள்ள இளவேந்திரன் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிரூபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் 2ம் எதிர்மனுதாரர் ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

| வரிசை எண் | தேதி | ஆவணங்கள் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| 01 | | வாகனத்திற்கான இன்சூரன்ஸ் பாலிசி | எ.ம.சா.ஆ.1 |

மேலே சொன்ன ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொண்டு நீதிமன்றம் சரியனெ கருதும் உத்தரவை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

**1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

இல்லை.

**மனுதாரர் தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

இந்த விபத்து சம்மந்தமாக எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றாலும், ஆவணங்களில் அடிப்படையில் தான் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ? சரிதான். KL 46 T 3184 என்ற வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடானது நடைமுறையில் இருந்து வந்தது என்றால் ? பாலிசி நிபந்தனைக்குட்பட்டு நடைமுறையில் உள்ளது. மேற்படி பாலிசியில் மூன்றாம் நபருக்கு வழங்கக்கூடிய இழப்பீட்டிற்கான பிரிமீயம் தொகை செலுத்தப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். இந்த விபத்தை பொறுத்து மனுதாரர் மூன்றாம் நபர் என்றால் ? சரிதான். காப்பீட்டு ஒப்பந்தம் என்பது வாகனத்தின் உரிமையாளருக்கும், எங்கள் நிறுவனத்திற்கும் இடையேயான ஒப்பந்தம் என்றால் ? சரிதான். ஆனால், பாலிசி விதிமுறைகளில் உள்ள சரத்துக்களை பொறுத்து ஒப்பந்தம் கட்டுப்படுத்தும். பாலிசி விதிமுறைகளை மீறி இருந்தால் ஒப்பந்தம் கட்டுப்படுத்தாது. நான் சொல்வது தவறு என்றாலும், காப்பீட்டு நிறுவனத்திற்கும், உரிமையாளருக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் மூன்றாம் நபரை கட்டுப்படுத்தாது என்றால் ? சரியல்ல. கட்டுப்படுத்தும். மூன்றாம் நபரான மனுதாரரை ஒப்பந்தம் கட்டுப்படுத்தாது என்றாலும், நான் நிறுவனத்திற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ? சரியல்ல. இந்த விபத்திற்கு முழுக்காரணம் 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் ? சரிதான். போலீசார் விசாரித்த பிறகு 1–ம் எதிர்மனுதாரருக்கு எதிராக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ? தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது. வட்டார போக்குவரத்து அதிகாரி ஓட்டுநருக்கு உரிமம் இல்லை என்று சொல்லியுள்ள

நிலையில் வேறு விலசாத்தில் ஓட்டுநர் உரிமம் இருந்தால் அது பற்றி எனக்கு தெரியாது என்றால் ? புலன் விசாரணை தன்மைபடி ஓட்டுநருக்கு எந்த இடத்திலும் உரிமம் இல்லை. நான் சொல்வது பொய் என்றாலும், எங்களது நிறுவனத்திற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ? சரியல்ல. இந்த விபத்திற்கு முழு காரணம் 1–வது எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநர் தான் காரணம் என்றாலும், விபத்து தேதியில் எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு காப்பீடானது அமலலில் இருந்துள்ளதால் மனுதாரருக்கு இன்சூரன்ஸ் நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் ? சரியல்ல.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2026.02.11 16:47:44 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்